[1994 ஏப்ரல் 13

கூட்டங்களும் நிரம்பிக் கொண்டிருக்கின்றன; உண்டியலும் குவிந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இதுபோன்ற கோரிக்கைகள் ஏதாவது வருமேயானால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 280, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

280—

முடிதிருத்தும் தொழிலை ஊக்குவிக்க திட்டம்.

*** 21558— டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

முடிதிருத்தும் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முடிதிருத்தும் தொழிலை ஊக்குவிக்க என அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வளர்ந்துவரும் நாகரீகக் காலத்தில் இப்பொழுதெல்லாம் நாம் நினைத்தபடி முடி திருத்துவதைச் செய்ய முடியாது. முன்கூட்டியே அப்பாயின்ட்மெண்ட் செய்கின்ற அளவிற்கு நம்முடைய முடி திருத்துகின்றவர்களுடைய சூழ்நிலை வளர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், மணப்பெண் வீட்டிலே எப்படி மண நாளுக்குத் தேதியைக் குறிப்பதற்கு முன்னால் கல்யாண மண்டபத்தினுடைய வசதியைப் பார்த்துத் தேதியைக் குறிக்கின்றார்களோ அதைப் போல அங்கே சிகை அலங்கார நிலையத்திலே அப்பாயின்ட்மெண்ட் இருக்கிறதா என்று பார்த்து மண நாளைக் குறிக்கின்ற அளவிற்கு நம்முடைய நாட்டில் நாகரீகம் வளர்ந்திருக்கின்ற காரணத்தினாலும், குக்கிராமங்களிலெல்லாம்கூட, அரசியல் சர்ச்சைகள், இப்படிப்பட்ட சிகை அலங்கார நிலையங்கள் மூலமாக ஆரம்பிக்கிற காரணத்தினால்......

1994 ஏப்ரல் 13]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. டாக்டர் ஸ்ரீதரன், கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்காமல், ஓரங்கட்டப்பட்ட நிலையில், எல்லோரும் இந்நாட்டு மன்னர்; யாரும் எவர்க்கும் சளைத்தவர்கள் அல்லர் என்ற சமுதாய மறுமலர்ச்சியை உண்டாக்கிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த முடிதிருத்தும் தொழில் புரிவோர்க்கு, இலவசமாக முடிதிருத்தும் கருவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் 500 முடிதிருத்தும் கருவிகள் அவர்களுக்காக வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நவீன முடிதிருத்தகம் அமைக்க வேண்டுமென்ற கருத்தை இங்கே சொன்னார்கள். அதற்கு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக, இன்றைக்குக் குறைந்த வட்டியிலே, 6 சதவிகித வட்டியிலே, அவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. அதனைக்கூட அவர்கள் பயன்படுத்திக் கொண்டு, `Modern Saloon`, நவீன முடிதிருத்தகம் அமைப்பதற்கு அவர்கள் முன்வருவார்கள் எனில், அதற்காக கடனுதவி, குறைந்த வட்டியில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவரிடம் கேட்கிற கேள்வியைக்கூட, இப்போது முடிதிருத்துபவர்களிடம் கேட்கிறார்கள். முடி கொட்டாமல் இருப்பதற்கு என்ன வழி; பொடுகு பிடிக்காமல் இருப்பதற்கு என்ன வழி; என்னுடைய அழகுக்கு ஏற்றவாறு முடியை எவ்வாறு திருத்த வேண்டும் என்றெல்லாம்கூட அங்கே இருக்கக்கூடிய முடிதிருத்துபவர்களிடத்திலே கேட்கிற அளவுக்கு, விஞ்ஞானம் இன்று வளர்ந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல; பெண்கள் சிகையலங்கார நிலையத்திற்குச் செல்கிறபோது, தங்களுடைய குடும்பக் கட்டுப்பாட்டை எவ்வாறு செய்துகொள்ள முடியும் என்பன போன்றவைகளையெல்லாம்கூட அங்கே விவாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது. கடந்த வாரம், நானும் முன்னாள் தலைமைச் செயலாளர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர்

டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய 15 அம்சத் திட்டத்தைச் சரிபார்ப்பதற்காக பல்வேறு இடங்களைச் சென்று பார்க்கிறபோது, நாங்கள் கண்ட உண்மை, பெண்களுக்குத் தனியாக, பெண்களே, ஓரிடத்திலே தங்களுடைய பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு நிலைமை உண்டாக வேண்டும் என்று கண்டறிந்தோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே, மருத்துவம் சார்ந்த, `Cosmetology and Hair-Dressing` என்ற ஒரு டிரெயினிங் கோர்ஸை அமைத்துத்தர, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு ஆய்வு செய்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

261—

கட்டிட களப்பணிகளுக்கான அதிகாரிகளுக்கு மேற்பார்வைப் பணி அளித்தல்.

**** 20800*— திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது கட்டிட களப்பணிக்காக நியமித்துள்ள அதிகாரியை இந்திய முத்திரைத்தாள் சட்டம் பிரிவு 47-ன் கீழ் மேற்பார்வைப் பணி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

263—

அம்பாசமுத்திரம் தொகுதி, வைராவிகுளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தல்

**** 21481*— திரு. ஆர். முருகையா பாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—